AL12-1-3

# பரலோகத்தை குறித்த சுவாரஸ்யம் என்ன? பரலோகம் சுவாரஸ்யமான இடமா? –

நிகழ்ச்சி 3

இன்று ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில் பார்க்கப்போவது, பரலோகத்தை குறித்த சுவாரஸ்யங்கள் என்ன? நீங்க ஒருவேளை டிஸ்னிலேன்டிற்கு போக நினைத்தாலோ, ஆல்பனில் ஸ்கையிங் செய்யவோ, ஐரோப்பா போகவோ, திட்டமிட்டால் முதலில் அது எப்படி இருக்கும் என்பது இணையதளத்தின் மூலமாக அறிந்துகொள்ள விரும்புவீர்கள். அப்படிபட்ட வழிகாட்டும் புத்தகங்கள் நம்மை அங்கு செல்ல பரவசப்படுத்திடும். பரலோகத்திற்கு செல்லும் வழிகாட்டி நம்முடைய வேதம், அதில் தேவன் நமக்கு வாக்களித்திருக்கும் புதிய வானங்களையும் புதிய பூமியையும் காண காத்திருக்கிறோம் என்றிருக்கிறது. ஆனால் பரலோகமானது, இந்த வசனம் சொல்கிற ‘‘புதிய வானங்கள் மற்றும் புதிய பூமி’’ ஒருநாள் உங்களுடைய வீடாக இருந்திடும், பரலோகத்தை குறித்து உங்களுக்கு என்ன தெரியும்? ஆங்கு என்ன செய்வீர்கள் என நினைக்கிறீர்கள், எப்படிபட்ட அனுபவம், நித்தியத்தை செலவிடப்போகும் இடம் எப்படிபட்டதாக இருக்கும்?

இன்றைக்கு எனது விருந்தினரான பரலோகம் என்ன புத்தகத்தின் ஆசரியர், டாக்டர். ரேன்டி அல்கார்ன். நம்முடைய எதிர்கால குடியிருப்பாகிய பரலோகத்தை பற்றி தேவன் கிறிஸ்தவர்களுக்கு வாக்களித்திருக்கிற அருமையான காரியங்களை விளக்கிடுவார். இன்றைய விசேஷ நிகழ்ச்சியில் நீங்களும் இணைந்திடுங்கள் ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில்.

-----------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நம்முடைய நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். மகிமையான தலைப்பாகிய பரலோகத்தை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். பரலோகத்தில் நாம் என்ன செய்யப்போகிறோம்? பரலோகத்தில் எப்படி இருப்போம்? இன்றைக்கு நம்முடைய சிறந்த நிபுனரிடம் பேச இருக்கிறோம், டாக்டர். ரேன்டி அல்கார்ன். நம்முடைய தேசத்தில் பரலோகத்தை பற்றி பேசுவதில் சிறப்புமிக்கவர், இந்த தலைப்பில் 47க்கும் அதிகமான புத்தகங்களை எழுதியுள்ளார். சரி, பிரியமானவர்களே, இந்த வசனத்திலிருந்து இப்போது துவங்கிடலாம், வெளிப்படுத்தல் 21:2,3 சொல்கிறது: ‘‘பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின. சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.’’

அதை தொடர்ந்து நாம் பார்க்கும்போது, ரேன்டி, அங்கே ஒருகாலும் மரணம் என்பது இல்லை, அங்கே எந்த துக்கமும் இல்லை, கண்ணீர் இல்லை என்று சொல்லப்படுகிறது. தேவன் தாமே அவற்றை நம்மைவிட்டு அகற்றிடுவார், வியாதி, வலி, மரணமில்லை. இங்கே விளக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு நாம் செல்வோம் என்று தேவன் சொல்கிறார். இந்த வாரம் நம்மோடு இணைந்திருப்பவர்களுக்கு இதை நாம் விளக்கிச் சொல்லலாம். நிகழ்கால

பரலோகம் இருக்கிறது. இப்போதும் நாம் ஒருவேளை மரித்தால், நிகழ்கால பரலோகத்தை சென்றடைந்திடுவோம். அது எப்படி இருக்கும், எதிர்கால பரலோகம் எப்படி இருக்கும்? ஏனென்றால் இதைக் குறித்து பலவிதமாக கருத்துகளோடு இருக்கிறார்களே? இதன் விளக்கத்தை சொல்லுங்க.

டாக்டர். ரனேட்டி அலகாரன்: நீங்கள் மரிக்கும் போது நிகழ்கால பரலோகத்தை சென்று அடைவீர்கள். இறையியலில் அதனை நடுவானம் என்கிறார்கள். நான் இப்படி சொல்வதில்லை, ஆனால் இதைதான் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நிகழ்கால பரலோகம் என்பது, இயேசு எங்கிருக்கிறாரே அங்கே நீங்கள் இருப்பீர்கள் என்பதுதான். தற்போது நாம் இருக்கும் இந்த தளத்திற்கு அப்பார்பட்ட ஒன்று, நாம் காண முடியாத ஒரு நிலையில் இருப்பது. ஆனால் 2 இராஜாக்கள்ள 6ல் இதனுடைய தகவலை பெறுகிறோம், அதாவது, எலிசாவும் அவனுடைய ஊழியக்காரனும் இருக்கிறார்கள், அப்போது அவன், “தேவனே, உமது அடியானின் கண்களை திறந்திடும் என்கிறான்.” அப்போதும் அந்த ஊழியக்காரன் குதிரை சேனைகளையும் இரதங்களையும் தன் மாம்ச கண்களில் காண்கிறான். சரி, அவை தற்செயலாக அப்படி தோன்றியிருக்க வாய்ப்பில்லை. அவை அங்கேயே தான் இருந்தது. அந்த ஊழியனால் அதைக் காணக்கூடாமல் இருந்தது. சில வேளைகளில் பரலோகம் என்பது அடுத்த ஒரு உலகம் என்பது போன்ற அடையாளங்கள் தோன்றிட வாய்ப்புள்ளது, நம்மால் அவற்றை காண முடியாது, ஆனால் அது அப்படியே இருக்கிறது. அது இயற்கையானது, உண்மையானது, காணக்கூடிய ஒன்று, ஆனால் சாதாரனமாக நம்மால் பார்க்க முடியாது. எதிர்கால பரலோகம் என்பது புதிய வானங்களும் புதிய பூமியும், புதிய உலகத்திற்கான அர்த்தம் இதுதான், மீட்கப்பட்ட ஒரு உலகம். அங்குதான் நாம் நித்திய நித்தியமாக இருந்திடுவோம். அங்கு தேவன் இறங்கி வந்து தமது ஜனங்களோடு வாசம்பண்ணுவார். நிகழ்கால பரலோகம் என்பது இயேசுவோடு இருப்பதை குறிக்கிறது. எதிர்கால பரலோகத்திலும் இயேசுவோடு தான் இருப்போம், ஆனால் இதிலுள்ள வித்தியாசம், நிகழ்கால பரலோகம் இங்கு பூமியிலுள்ளது. எதிர்கால பரலோகமும் இந்த பூமியில் தான் இருக்கும், கிறிஸ்துவிற்கு கீழாக வானமும் பூமியும் ஒன்றிணைந்திடும், அதை எபேசியர் 1ல் நமக்கு சொல்லப்பட்டுள்ளது.

டாக்டர். ஜான் அனகரபர்க்: ஆமாம், புதிய எருசலேமைப்பற்றி சொல்லுங்க, நாம் எல்லாரும் இருக்கப்போகும் நகரம், “இந்த தேகத்தைவிட்டு நாம் பிரிந்து தேவனோடு இருந்திடுவோம்,” அவருடைய அழகான நகரத்திலிருப்போம். அந்த நகரம் எவ்வளவு பெரியது? அந்த நகரத்தில் என்னென்ன காரியங்கள் இருக்கும்? இப்போது அதை அப்படியே விளக்கி சொல்லுங்க.

டாக்டர். ரனேட்டி அலகாரன்: அது பெரியது என்று நமக்கு தெரியும். இந்த தூதனால் மனிதர்களின் அளவுகோல் போல அளக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறது, அது 1400 மைல் கி . சரி, புதிய எருசலேம் இப்போது பரலோகத்தை இருப்பதாக கூறப்படுகிறுது, இந்த பூமிக்கு கொண்டு வரப்பட இருக்கும் புதிய எருசலேமின் அளிவு இதுதான். இருந்தாலும் பலருடைய கருத்து என்னன்னா, “ அது, அப்படியே இருக்காது, ஒரு குத்துமதிப்பு என்கிறார்கள், சரி, அப்படி தொராயமான கணக்காயிருந்தால், அது பெரிய அளவை தானே குறிப்பதாக இருக்கிறது, அது பெரியது. இது நமக்கு எதை வெளிப்படுத்துகிறது என்று சொல்லனுன்னா, எல்லாவற்றிற்கும் அங்கு அறைகள் இருக்கும், பல அறைகள் இருக்கும். பல காரியங்கள் இருக்கும், பல இடங்கள் இருக்கு, பார்க்க வேண்டியவை அதிகம். வெளிப்படுத்தல் 22ல் சொல்கிறது, அவருடைய ஊழியர்கள் அவரை சேவிப்பார்கள். ஊழியர்களுக்கு ஏதாவது குறைச்சல் இருக்க வாய்ப்புண்டா? தேவனுடைய மகிமைக்காக நாம் இந்த உலகை ஆளுகை செய்வோம் என சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுகிறவர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லும் நிலை இருக்குமா? எனவே அங்கே செய்யும்படியான பலதரப்பட்ட விஷயங்கள் இருக்கும். அதில் பெரிய பகுதி என்னவென்றால், உண்மையாக, எல்லா நன்மைக்கும் சந்தோஷத்திற்கும் காரணமாயிருக்கும் தேவனோடு நாம் இருப்போம்.

டாக்டர். ஜான் அனகரபர்க்: சரி சொல்லுங்க, அந்த புதிய நகரத்தில் ஜீவ தண்ணீருள்ள நதி இருக்கும். அது என்ன, ஏன் நமக்கு அது வேண்டும்?

டாக்டர். ரனேட்டி அல்காரன்: ஜீவ தண்ணீருள்ள நதி, நிச்சயம், அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து ஓடும் நதியாக இருக்குமென நினைக்கிறேன், ஏனென்றால் ஜீவ விருட்சத்தின் மரம் நமக்கு தெரியும், அந்த நதியின் இருகரைகளிலும் வளர்ந்து நிற்கும் என்று தெரியும், அது நிஜமான மரம். ஆந்த ஜீவ விருட்சத்தின் மரத்தில், உண்மையான கனிகள் தோன்றுகிறது உண்மை, அது ஏதேன் தோட்டத்தில் இருந்தது. அந்த மரத்தின் கனியை அவர்கள் புசித்தார்கள் மற்ற மரங்களும் இருந்தது. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை மட்டும் அவர்கள் புசிக்க கூடாதிருந்தது. ஆனால் ஜீவ விருட்சமும் இருந்திருக்கிறது, அதின் வாசல்கள் அடைக்கப்பட்டபோது அவை மறைந்துபோயின, நீதிமொழிகளின் புத்தகத்தில் அதின் சாயலை ஓரிரு இடங்களில் பார்க்க முடியும், ஆனால் வெளிப்படையாக மறுபடியும் வெளிப்படுத்தல் 2ல் இருக்கிறது, ஜீவ விருட்சம் தேவனுடைய பரதீசியில் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக அது வெளிப்படுத்தல் 22ல் இருப்பதை பார்க்கிறோம், அந்த நதியின் இருகரைகளிலும் ஜீவ விருட்சம் உண்டாயிருக்கிறது. எனவே, இந்த ஜீவ விருட்சம் என்பது உண்மையானது, உண்மையான மரம். அந்த நதி நிஜமானது அதனால் தான் இவை அதன் கரைகளில் வளர்கிறது. அவை ஒவ்வொரு மாதமும் புதிய கனிகளை கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த மரத்தின் இலைகள் தேசங்களுக்கு ஆரோக்கியத்தை உண்டாக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே அவை அன்றாட வாழ்விற்கு அத்தியாவசியமான ஒன்றாக இருக்கும், வாழ்விற்கு தேவையானது. நாம் முடிவில்லாமல் இருக்கமாட்டோம். இவை இல்லாமல் நாம் இருக்க மாட்டோம். வித்தியாசம் என்னவென்றால், நம்முடைய தேவைகள் எப்போதும் சந்திக்கப்பட்டும் என்பதுதான். நாம் சாப்பிடவே மாட்டோம் என்றல்ல, ஆனால் ஒருபோதும் பசியோடு இருக்க மாட்டோம், ஏனென்றால் அங்கே எப்போதும் ஏராளமான உணவுகள் இருக்கும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமாம், இன்னும் கொஞ்சம் இதை பற்றி நாம் பார்க்கலாம். அதாவது ஒரு நகரம் இருக்குமென்றால், இந்த புதிய எருசலேம், அது 1400 மைல் நீளமுடையது, அதின் அகலம் 1400 மைல் மற்றும் உயரமும் 1400 மைல், ஒரு நகரத்தின் அளவு. அங்கே இந்த அழகான நதி பாய்ந்து வருகிறது, அதுவும் சுமார் 1400 மைல் இருக்கும், அது எல்லா திசைகளிலும் பாய்ந்திடம் இல்லையா. இந்த தக்கமயமான வீதிகளின் நடுவில் அவை ஒருவேளை வாய்க்காலாக ஓடும், அதாவது கீழாக ஓடும் வென்னிஸ் நகர வாய்க்கால்கள் போலிருக்கும்.

இதை நாம் குடிக்க முடியும் மேலும் அழகான மரங்கள் இருக்கும் வெளிப்படுத்தல் விவரிக்கும் காரியத்தை கற்பதை செய்ய முடிகிறது. நீங்க சொல்லுங்க, இது உண்மையில் எப்படியிருக்கும், இந்த நகரத்தில் வேறென்னவெல்லாம் இருக்கும்?

டாக்டர். ரனேட்டி அல்காரன்: நூம் தேவன் காண்போம் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது. சரி, சிலருக்கு அது பயமுறுத்திடும் ஒரு காரியமாயிருக்கிறது, ஏனென்றால் பழைய ஏற்ப்பாட்டில் தேவன் ஒருவரும் ஒருகாலும் கண்டதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் கண்டு ஒருவனும் ஜீவித்திருக்க முடியாது. அதற்கு காரணம் நம்முடைய பாவம் நிறைந்த நிலைதான். ஆதாம் தேவன் கண்டு ஜீவித்திருந்தான் தேவ்ன ஏதேன் தோட்டத்தில் இறங்கி வந்து அவனோடு உலாவிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார். எப்ப பாவம் உலகத்திற்குள் வந்ததோ, அதுதான் தேவன் காண்பதில் ஒரு அச்சத்தை நமக்குள் உண்டாக்கியது. ஆனால் சொல்லப்பட்டபடி, நாம் கிறிஸ்துவின் நீதியினால் மூடப்பட்டிருக்கிறோம், நீதியுள்ளவர்களாக மாறியிருக்கிறோம், தேவனுடைய பிரசன்னத்தில் நம்மால் நிற்க முடியும். எனவே இயேசு கிறிஸ்துவை நேசிப்பவர்கள், அவருடைய இரத்தத்தில் மூடப்பட்டு, தேவனை தரிசிப்பதோடு அவர் அளிக்கும் நன்மையையும் காணலாம், பரிபூரண சந்தோஷத்தை காணலாம், எல்லாவற்றையும் அவர்கள் காண முடியும். ஆனால் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களோ, தேவனை பார்ப்பதற்கு பயப்படுவதற்கு காரணம் உள்ளது, கிறிஸ்துவோடு ஒரு உறவு இருக்க வேண்டியது அவசியம், பாவத்திலிருந்து மனந்திரும்பி, கழுவப்பட்டு, பின்பு தேவனை கண்டு அவர்களும் மகிழச்சியடைந்திடலாம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், இது அருமையானது, நண்பர்களே. இப்போதும் ஒரு இடைவேளை எடுக்கப்போகிறோம். நாம் திரும்ப வந்ததும் பேச இருக்கும் காரியம், பரலோகத்தில் நாம் என்ன சாப்பிடுவோம்? பரலோகத்தில் நாம் தூக்க முடியுமா?

பரலோகத்தில் மிருகங்கள் இருக்குமா? நீங்கள் நேசிக்கும் செல்லப்பிராணியுடன் பரலோகத்தில் மீண்டும் இணைய முடியுமா? ஆல்ரைட், சுவாரஸ்யமான கேள்விகள்: நாம் திரும்பி வந்ததும் ரேன்டியை இந்த கேள்விகளுக்கு பதில் சொல்லும்ப கேட்கலாம். இணைந்திருங்கள்.

--------------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் இப்போது ரேன்டி அல்கார்னுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், பரலோகம் என்ற மகத்தான தலைப்பைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போதும் ஒரு சுவாரஸ்யமான கட்டத்தில் இருக்கிறோம் நான் கேட்க விரும்பும் காரியம் இதுதான், வேதாக அடிப்படையில் சொல்லுங்க, ரேன்டி, பரலோகத்தில் மிருகங்கள் இருக்கும் என்று எதிர்பார்ப்பது முறையா? ஆதை தொடர்ந்து அடுத்ததையும் பார்க்கலாம், ஜனங்கள், கிறிஸ்தவர்கள், அவர்கள் மிகவும் நேசித்த செல்லப்பிராணிகள் இருக்கும், அவர்கள் பரலோகத்தில் செல்லப்பிராணிகளுடன் மறுபடியும் சேர முடியுமா? ஆல்ரைட், தொடக்கத்திலிருந்து பார்க்கலாம், முதலாவதாக. ஏலியா, நமக்கு தெரிந்த ஒன்று, குதிரைகள் பூண்டிருந்த இரத்தினால் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார், 2 இராஜாக்கள் 2:11ல் உள்ளது. அதன் பிறகு வெளிப்படுத்தல் 6: 2, 8ல் சொல்லப்பட்டுள்ளது பரலோகத்தில் பல குதிரைகள் இருக்கிறதாம். ஊண்மையில், பரலோக சேனைக்கு போதுமான அளவிற்கு குதிரைகள் இருக்கிறது, மீட்கப்பட்ட அனைத்து பரிசுத்தவான்களும், கிறிஸ்து மீண்டும் பரலோகத்திலிருந்து வரும்போது அவரோடே அவர்களும் வருவார்கள். எனவே அங்கே அதிகமான குதிரைகள் இருக்கும். பரலோகத்தில் வேறெந்த மிருகங்கள் இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: சரி, முதலாவதாக, அங்கே இத்தனை குதிரைகள் இருக்க கூடுமானால், நிச்சயம் மற்ற மிருகங்களும் இருக்கும். ஏனென்றால் பரலோகத்தில் ஒரு மிருகம் மட்டுமே இருக்குமானால், அதைப் பற்றி ஏன் பேசப்பட வேண்டும்? சரி, அதற்கு ஒரு காரணம் இருக்கிறது: என்னவென்றால் அங்கே சென்றவர்களோடு தொடர்புடையதாக இருக்கிறது, எலியா மற்றும் தேவனுடைய வருகையின் போது அவரோடு கூட வருகிற நாம் அதிலே வந்திடுவோம், நிச்சயமாக. நமக்கு சொல்லப்பட்டிருப்பது இதுதான். ஆனால் மற்ற மிருகங்களை குறித்து என்ன தெரியும்? சரி, நிகழ்கால பரலோகத்தில் இருக்கும் மற்ற மிருக ஜீவன்களை பற்றி அதிகம் தெரியாவிட்டாலும், புதிய பூமியில் இருக்கப்போகும் மிருகங்களைப் பற்றி நமக்கு தெரியும். அதற்கு காரணம் என்னவென்றால் ஏசாயா 60ஐ 2 முறை வெளிப்படுத்தல் 21 மற்றும் 22ல் சொல்லப்பட்டுள்ளது, அவை புதிய பூமியை குறித்து சொல்லும் பகுதிகள். அந்த அதிகாரம் முழுவதும் மிருகங்களை பற்றியதுதான். ஓட்டகங்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது குதிரைகளைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது கடாக்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது மற்ற மிருகங்களை பற்றியும் அங்கே பார்க்க முடியும். எசேக்கியல் 47, இதுவும் புதிய பூமியை குறித்து பேசப்படும் பகுதியாக வசனங்களின் இறுதியில் இருக்கிறது, தண்ணீரிலுள்ள மீன்களை பற்றியது. இதைதான் நாம் பார்க்கிறோம்.

ஆனால் ரோமர் 8ல் மிகத்தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அற்த பகுதியை தியானித்ததை என்னால் மறக்கவே முடியாது, அதை நான் தியானித்த போது புதிய பூமியில் மிருகங்கள் இருக்குமா என்ற கேள்வியை என்னைவிட்டு நான் விளக்கிவிட்டேன். அதை வாசித்து முடித்தபோது, இந்த காரியத்தை குறித்த எனது எண்ணத்தை நான் மாற்றிக்கொண்டதை உணர்ந்தேன். எனக்கு தோன்றிய விஷயங்கள், எனக்கு விலங்குகள் பிடிக்கும். புதிய பூமியில் மிருகங்களும் இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்வது கொஞ்ச சிரமமான விஷயமாக தோன்றலாம். ஆனால் ரோமர் 8ல் பார்க்கும்போது சர்வ சிருஷ்டியும் வேதனைபடுகிறது என்றிருக்கிறது. கர்ப்ப வேதனைபடுகிறதென சொல்லப்பட்டுள்ளது, சர்வ சிருஷ்டியும். மனிதனை மற்ற சிருஷ்டிப்புகளிலிருந்து பிரித்து, பிறகு சர்வ சிருஷ்யும் என்று கூறுகிறது. எனவே மனிதர்கள் மட்டும் வேதனைபடுவதில்லை என்கிறது.

சரி, இந்த சிருஷ்டிப்பில் ஜீவனற்ற எவை வேதனைபடுகிறதாக இருக்கிறது? அதாவது, மிருகங்கள் வேதனைபடும் ஆற்றலை கொண்டிருக்கிறது. அதை தொடர்ந்து அதில் பாடுபடுகிறவர்கள் அனைவரும் அதாவது, சிருஷ்டிப்புகளில் ஒரு பகுதியை மட்டும் குறிப்பதாக

சொல்லவில்லை, தேவனுடைய பிள்ளைகள் உயிர்த்தெழும்போது அவைகளும் மீட்பை பெற்றுக்கொள்ளும் என்று சொல்லப்படுகிறது. ஓகே, அப்படின்னா மனிதர்களைப் போல ஏதோரு விதத்தில் மிருகங்களும் உயிர்த்தெழுந்திடுமா. தேவ்ன அவைகளை மீண்டும் சிருஷ்டித்திடுவாரோ, எதுவும் நடக்கலாம். ஆனால் இங்கு சொல்லப்படும் விஷயம் இதுதான், புதிய சிருஷ்டிப்பில் மிருகங்கள் இருக்கும் என்று சொல்லப்படுவதோடு, இப்போது வேதனைப்படும் மிருகங்கள் மீட்க்கப்பட்டதாக தேவனையிலிருந்து விடுபட்டு சந்தோஷத்தை அனுபவிக்கும் வேதனையின்று மரணமின்றி புதிய பூமியில் இருக்கும்.

ஆல்ரைட், இதை பார்க்கும் பேர்து இன்னொன்றும் சொல்லமுடியும், சரி, இந்த வாழ்விலிருந்து அடுத்த வாழ்வில் பங்குள்ளதாக எந்த மிருகத்தை தேவன் தெரிந்துகொள்வார் என்று கேள்வி வருகிறதே? ஆவரைப் போலவே நாமும் செயல்பட முடியுமா அதாவது நாம் தனிப்பட்டவிதத்தில் ஆதிக்கம் செலுத்திய, ஐக்கியமாக இருந்த, தேவனுடைய பிள்ளைகளான நாம், நம்முடைய வாழ்வில் அர்தத்தை ஏற்படுத்தியதை கொண்டு போகமுடியுமா – உண்மையில் எனக்கும் என் மனைவிக்கும் நாய்களை பிடிக்கும் நிறைய நாய்கள் இருக்கிறது, அந்த விலங்குகள் மூலமாகவும் தேவன் எங்களோடு இடைபட்டிருக்கிறார். நாய்களை வைத்தும் பலவற்றை கற்றுக்கொள்ள முடியும், அதாவது, அவை உங்கள் மேல் ஏறி முகத்தை நக்கிடும் நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ அப்படியே உங்களை நேசிக்கும். அது நிபந்தனையற்ற அன்பு அதில் பேரானந்தம் இருப்பது நிச்சயம்.

தேவன் கூறுகிறார் அவர் தம்மை தமது சிருஷ்டிப்புகளில் வெளிப்படுத்துகிறார். அது உண்மை என்றால், வருகிற நாட்களில், அவரைப் போல ஜனங்களும் தங்கள் செல்லப்பிராணிகளோடு இணைக்கப்படுவார்களா – வேதத்தின் அடிப்படையில் நமக்கு தெரியாது, ஆனால் அப்படி நடப்பதற்கு வாய்ப்பிருக்கிறது – அவைகளோடு நாம் நித்தியமாக சந்தோஷமாயிருக்க முடியும் வலியில்லாத உலகம், கவலையில்லாத உலகம், மரணமில்லைாத உலகம். மேலும் ரோமர் 1 கூறுகிறது சிருஷ்டிப்புகளை பார்க்கும்போது, நாம் அவற்றில் தேவனுடைய குணாதிசயங்கள் வெளிப்படுவதை காண்கிறோம், ஒரு மிருகத்திடம் கூட தேவனுடைய பண்புகளை காண முடியுமாம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமாம், அங்கே இனி சமுத்திரம் இல்லாமற்போகும் என்று சொல்லும்போது, ஓகே, புதிய வானத்தில் சமுத்திரம் இருக்காது, புதிய பூமியிலிருக்காது, ஓகே. அதாவது நம் எல்லாருக்கும் கடலை பிடிக்கும், சரியா. எனவே, ஏதோவொன்றை இழக்கிறோமா? இத எப்படி பார்க்கிறீங்க?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: உண்மையில் எதையோ இழக்கிறோம் என நினைக்கிறேன், ஜான், ஏனென்றால் சார்லஸ் ஸ்பர்ஜன் சொன்னது என் நினைவிற்கு வருகிறது, ஸ்பர்ஜன் ஒரு வாக்குவாதத்தில் இருந்தார், அதாவது, சமுத்திரம் - அந்த காலத்து மக்களுக்கு – அது தீமையான ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது. ஜனங்கள் சமுத்திரத்தில் காணமல் போனார்கள், ஜனங்கள் மூழ்கினர், ஜனங்கள் நல்ல தண்ணீரை விட்டுவிட்டு உப்புத்தண்ணீரை குடிக்கும்படி ஓடுவார்களாம். எதிராளியின் சேனைகள் வருவதும், அல்லது கடற்படை வருவதும், கடல்வழியே தான். உங்களுக்க அன்பானவர்களிடமிருந்து உங்களை பிரித்துவிட்டது. கெட்டதாக தோன்றிய அனைத்தும் கடலில் சம்பந்தப்பட்டதாக இருந்திருக்கிறது.

எனவே இனி சமுத்திரம் இராது என்று சொல்லப்படும் போது, கடல் போன்ற பெரிய நீர்நிலைகள் இருக்காதா? சரி, இங்கு நதி இருக்கிறது, பெரியது, தேவனுடைய சிங்காசனத்திலிருந்து பரந்தோடும் பெரிய நதி, அது எங்கேயோ போகிறதென நினைக்கிறீர்களா. அது எங்கு போகிறது? அது இந்த முழு உலகிற்கும் தண்ணீர் பாய்ச்சும்படி ஓடுகிறது, அது பெரிய ஏறியாக இருக்கலாம், அல்லது நாம் சொல்லும் கடலாக கூட இருக்கலாம், ஆனால் சமுத்திரம் என்று சொல்லப்படும் உப்பு நீர் கொண்ட நச்சுத்தன்மை உடையதாக இருக்காது. எசேக்கியல் 47 புதிய பூமியை குறிக்கும் பகுதி. வெளிப்படுத்தலின் இறுதி பகுதியில் சொல்லப்பட்டிருப்பதால் இது நமக்கு தெரியும். மேலும் அதில், அந்த நகரத்தை சுற்றி ஓடும் என்று சொல்லப்பட்டுள்ளது, அவை கடலில் கலக்கப்படும் போது, உப்பு தண்ணீரை நல்ல தண்ணீராக மாற்றுகிறது. இது அருமையான விளக்கம் என்று நான் நினைக்கிறேன். சமுத்திரம் இனி சமுத்திரமாகவே இருப்பதில்லை. அது நல்ல தண்ணீராக

இருக்கும். மிருகங்களை குறித்து பார்க்கும்போதும், உலகில் ஜீவனுள்ள மிருகங்களில் மூன்றில் ஒரு பங்கு அதிகமாக கடல்களில் வாழ்வது குறிப்பிடத்தக்கது. அந்த தண்ணீர் நல்ல தண்ணீராக எப்படி மாறிற்றோ அதேப்போல தேவன் அந்த மிருகங்களுக்குள் செய்ய வேண்டிய மாற்றங்களையும் செய்திடுவார் என நினைக்கிறேன். உதாரணமாக, சிங்கமும் கரடியும் ஆட்டுக்குட்டியும், ஒன்றாக படுத்திருக்கும் என்று பார்க்கிறோம். மேலும் சிங்கம் மாடுகளின் வைக்கோலை தின்னும் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே தேவன் அவைகளுக்குள் சில மாற்றங்களை ஏற்படுத்திவார் அப்படி செய்யும்போது அவைகள் அந்த இடத்திற்கு ஏற்றிருக்கும் அந்த புதிய பூமியில் மரணமும் இல்லை, கொல்லப்படுவதும் இல்லை.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: புதிய பூமியில் மலைகள் பார்க்க முடியுமா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: நிச்சயம். வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது, யோவான் உயர்ந்த மலைகளின் மேல் கொண்டுபோகப்பட்டார் அவற்றை கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். மலைகள் என்று சொல்லப்படாமல் மலை என்று சொல்லப்பட்டுள்ளது. ஒன்று என்றால் இங்கே பல மலைகள் இருக்க வாய்ப்பிருக்கிறது என்று தான் அர்த்தம். அதைப்போலவே அங்கு ஜீவ விருட்சத்தின் மரம் உள்ளுது, அதனால் மற்ற மரங்களும் இருக்ககூடும். ஒன்று என்று சொல்லப்படுகிறது. ஒன்று என்று சொல்லப்படும் போது அங்கே அதிகமாக இருக்க கூடும் என்று நிதானிக்க முடியும். அது ஒவ்வொரு மாதமும் கனிகளை கொடுக்கிறதாம், நாம் அந்த கனியை புசித்திடுவோம். மேலும் அங்கே விருந்து இருக்கிறது, அதனால் மற்ற உணவுகளும் அங்கே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை புதிய பூமியில் நாம் ஆனந்தமாக இருக்கலாம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நாம் பரலோகத்தில் தூங்க முடியுமா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: அது நமக்கு தெரியர்து. அப்படி எங்கும் சொல்லப்படவில்லை, ஆனால் அதற்கு பதிலாக சிலவேளைகளில், அதாவது, அப்படியுமிருக்கலாமோ, ஏனென்றால், நாம் அதிக சத்துவமுள்ளவர்களாக வல்லமையுள்ளவர்களாக இருப்போம் அதினால் ஓய்வுதேவையில்லை. இல்ல, நாம் நித்தியமாக வாழ்ந்திடுவோம், ஆனால் அதற்கு அர்த்தம் நாம் எல்லையற்றவர்கள் என்பதல்ல. தேவனே எல்லையில்லாதவர். எனவே நமக்கு சில எல்லைகள் இருப்பது உண்மை. ஆதாம் ஏவாள் தூங்கவேண்டியிருந்ததா? கணிப்புப்படி அதற்கு பதில் ஆமாம். தூக்கம் சாபத்தின் விளைவாக இருக்கிறதா? எனக்கு அப்படி தோன்றவில்லை. இனி சாப்பிடுவது இருக்காது என்பது சாபத்தின் விளைவாக இருக்குமா. அதனால் நமக்கு தூக்கமும் ஓய்வும் அவசியம் என்று தான் நான் நினைக்கிறேன். அங்கே நாம் இப்போது அனுபவித்தும் தளர்வும் நம்மை பெலவீனப்படுத்தும் சோர்வும் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: மார்மன் சபையினர் நாம் பரலோகத்தில் திருமணம் செய்துகொள்வோம் என்கின்றனர், ஆனால் இயேசு என்ன சொல்கிறார்?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: இயேசு நாம் பரலோகத்தில் பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை என்று கூறியிருக்கிறார். அநேகருடைய கருத்து என்னவென்றால், ஓ இல்ல, எனக்கு என்னுடைய துணையை ரொம்ப பிடிக்கும் நாங்க இரண்டுபேரும் கணவன் மனைவியா நித்தியமாக வாழவேண்டும் என்கின்றனர். ஆனால் அதை நான் வேறுவிதமாக பார்க்கிறேன். நேன்சியும் நானும் -- நேன்ச என் மனைவி. அவ என்னோட அருமையான தோழி. நாங்க ரொம்ப நெருக்கமாயிருக்கோம் நாட்கள் செல்ல செல்ல எங்க நெருக்கம் அதிகமாகிவிட்டது. அவ என்னோட சிறந்த தோழி. ஆனால் எனக்கு தெரியும், நித்தியமாக நாங்க இரண்டு பேரும் குடும்பமாக இருப்போம் என்று எனக்கு தெரியும். ஏன்? ஏனென்றால் பரலோகத்தில் குடும்பங்கள் இருக்காது என்று வேதம் சொல்லவில்லை, அங்கே ஒரே திருமணம் தான் இருக்கும் என்று சொல்கிறது. நாம் கிறிஸ்துவை திருமணம் செய்திடுவோம், கிறிஸ்தும் அவருடைய மணவாட்டியும். நேன்சியும் நானும், இரண்டு பேரம் கிறிஸ்துவின் மற்ற மணவாட்டிகளோடு இணைந்து, அவரை மணந்துகொள்வோம். எனவே கிறிஸ்துவின் மணவாட்டியாக எங்களுடைய ஐக்கியத்தையும் நெருக்கத்தையும் நாங்கள் தொடந்து அனுபவித்து மகிழ்ந்திடுவோம், எங்களை ஒருபோதும் நிராகரிக்காத எங்கள் துணையாளர்

அவர்தான். அவர் எல்லையற்றவர் நாங்கள் மகிழ்ந்திருப்போம், மேலும் இந்த பூமியில் அனுபவித்திடாத நெருக்கமான உறவு எங்களுக்கு உண்டாகும் என நினைக்கிறேன், அது அருமையாயிருக்கும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் சிலர் தாங்கள் நிச்சயம் பரவோகம் செல்வோம் என்று நினைக்கிறார்கள், ஆனால் அது உண்மையல்ல. இதை அவர்கள் புரிந்துகொள்ள உதவிட கேட்கிறேன். நமக்கு இரண்டு நிமிடங்களே உள்ளது. அவர்கள் தாங்கள் கொண்டிருக்கும் மூடத்தனத்தை விட்டுவிட்டு எப்படி பரலோகத்திற்கு செல்லும் நிச்சயத்தை பெற்றுக்கொள்வது என்பதைக் குறித்து சொல்லுங்கள், தேவன் சொல்லியிருப்பதை அவர்கள் செய்யவேண்டும் என்பதை சொல்லுங்கள்.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: எத்தனை பேர் அடக்க ஆராதனைகளில் ஜோவினுடைய கதையை கேட்டிருக்கிறீர்கள் என தெரியாது. ஜோ மரித்துபோனான், அவனுக்கு கால்.்.ப் விளையாட்டு பிடிக்கும், இப்போது மேல கால்.்.ப் விளையாடீட்டு இருப்பான்றதுல்ல சந்தேகமில்லை. சிலவேளைகளில் நாம் யோசித்திருப்போம் என நினைக்கிறேன், எனக்கு ஜோவ தெரியும். உங்களுக்கு தெரியுமா, அவ இயேசு கிறிஸ்துவ நேசிக்கல. அவனுடைய பாவங்கள விட்டு மனந்திரும்பல. தேவனை கனப்படுத்திடும் வாழ்க்கையை அவன் வாழவில்லை, பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் பாத்திரமாக அவன் இல்லை. தேவன் அவன் அறிந்துகொள்ளவில்லை, இரட்சகரையும் அவன் அறிந்துகொள்ளவில்லை. அது ஒரு பொய்யான வாழ்க்கை. அப்படிபட்டவர்களுக்கு நரகம் தான் முடிவு என்று வேதம் சொல்கிறது. எந்த மாற்றமும் இல்லாவிட்டால், நாம் அங்கு தான் செல்ல வேண்டும். நாம் பாவிகள். தேவனுடைய கிருபையை பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை பெற நாம் எந்த சாதனையும் செய்ய முடியாது, ‘‘நம்முடைய நீதியின் கிரியைகளினால் அல்ல, அதை நாம் செய்திருக்கிறோம், ஆனால் அவருடைய இரக்கத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். விசுவாசத்தினாலே அவருடைய கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டோம், இது நம்மால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவாக இருக்கிறது, ஒருவனும் பெருமைபாராட்டாதபடி இது கிரியையினால் உண்டானதல்ல.’’ பரலோகத்திற்கு செல்ல நாம் நம்முடைய கிரியைகளினால் ஒன்றும் செய்ய இயலாது. ஒருவர் இப்படியாக சொன்னார், ‘‘ஹேய், எனக்குரியது எனக்கு வேண்டும்,’’ கவனிங்க! உங்களுக்கு உரியது உங்களுக்கு வந்திடாது. உங்களுக்கு உரியது 4 எழுத்துள்ளது வார்த்தை தான், நரகம். எனக்கு ஏற்றது அதுதான். ஆனால் தேவனுடைய கிருபையினால் அவர் எனக்கு பரலோகத்தில் நித்தியமாக இருக்கச் செய்தார் அதற்கு நாம் அவருக்கு முன்பாக முழங்காலிட்டு ஈவாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: தேவனிடம் கேட்க வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்காக நீங்கள் சிறிய ஜெபத்தை சொல்லுங்கள், அவர்கள் உங்களோடு இணைந்து ஜெபிப்பார்கள். அவர்கள் தங்களுக்காக ஜெபித்திடட்டும். அவர்கள் என்ன சொல்லவேண்டும்? சரி, பிரியமானவர்களே, இயேசுவை நீங்கள் அறிந்துகொள்ளவும் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படவும் விரும்பினால், இப்போது நீங்கள் ரேன்டியுடன் சேர்ந்து அவர் ஜெபிக்கிற வேளையில் இணைந்துகொள்ளுங்கள்.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: ஆண்டவராகிய இயேசுவே, நான் ஒரு பாவி என்பதை உணருகிறேன், நரகத்திற்கு பாத்திரனாக இருக்கிறேன். நான் பரலோகத்திற்கு பாத்திரன் அல்ல. தேவனே, என் இருதயத்தின் நிலையை எனக்கு காண்பியும். உம்முடைய வார்த்தையை மீறி நடந்ததை வெளிப்படுத்தும். எனக்குள்ளிருக்கும் வெறுப்பு, எனக்குள் இருக்கும் எரிச்சல், நான் செய்த இச்சையான காரியங்கள், திருட்டு, போன்றவை உண்டு. தேவனே, உமக்கு விரோதமாயிருக்கும் இருதயம் மற்றவர்களுக்கு விரோதமாயிருக்கும் இருதயம் உம்மை நேசிக்காத இருதயம், மற்றவர்களை நேசிக்கவில்லை. ஆண்டவரே, எனக்குள் இருக்கும் பாவத்தை உணர்கிறேன், என்னை உம்மை விட்டு பிரித்துவிட்டதை உணருகிறேன். தயவாக கேட்கிறேன், இயேசு கிறிஸ்துவின் கிருபையினால், என்னுடைய பாவத்திற்காக அவர் சிந்தின இரத்தத்தினால் என் வாழ்வை கழுவி, முழுமையான பாவ மன்னிப்பை நான் அனுபவிக்க செய்திடும் உம்முடைய கிருபையினால் பரலோகத்தில்

உம்மோடு நித்தியமாக இருப்பேன் என்ற நிச்சயத்தை தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆடிமன்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நண்பர்களே, இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருப்பீர்களானால், வேதம் சொல்கிறது, ‘‘எவனும்’’ அந்த இடத்தில் உங்க பெயரை சொல்லுங்கள், ‘‘ தேவனுடைய நாமத்தை தொழுது கொள்ளும் எவனும்’’, ஒருவேளை இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால், தேவன் கூறும் இந்த வசனத்தின் பின்பகுதியை பெற்றிடுவீர்கள், ‘‘நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்’’. அவர் உங்களை பார்த்து, அதை அர்த்தமுள்ளதாக்குவார், அவர் உங்களை இரட்சித்திருக்கிறார். உங்கள் வாழ்வில் அவர் கிரியை செய்ய தொடங்கிடுவார். உங்களுடைய பாவங்களை அவர் மன்னித்துவிட்டார் அவர் உங்களோடு வாசம்பண்ணி உங்களோடு நடந்து உங்கள் வாழ்வில் மாற்றத்தை அளித்திடுவார்.

அடுத்த வாரம் நாம் வாசம்பண்ணப்போகும் இந்த பிரம்மாண்டமான நகரத்தை பற்றி பேச இருக்கிறோம், புதிய எருசலேம், அங்கே எப்படிபட்ட அனுபவம் இருக்கும், அதன்பிறகு அந்த புதிய எருசலேம் எப்படி இந்த பூமிக்கு இறங்கி வரும் எப்படி தேவன் இந்த பூமியை மறுபடியும் சிருஷ்டிப்பார். அடுத்த வாரம் இணைந்திடுவீர்கள் என நம்புகிறேன்.

பிரியமானவர்களே, அடுத்த வாரம் இணைந்திடுவீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய மற்ற டிவி நிகழ்சிகளை பார்க்க எங்களுடைய ஜான் அன்கேர்பெர்க் ஷோ ஆப்பை இலவசமாக பதிவிறக்கம் செய்திடுங்கள்.

“இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கான ஜெபம்” JA show.org